வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    15.05.2025 செவ்வாய்க்கிழமை    இதழ் : 196    பக்கங்கள் : 12




# அன்ரன் பாலசிங்கத்துக்கு பிரான்ஸ் தலைநகரில் சிலை

## நகர சபை அனுமதியுடன் அடிக்கல் நாட்டல்





பாரிஸ், ஜூலை 15

**தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நினைவு சிலை அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் கடந்த 12ஆம் திகதி பாரிஸ் புறநகர்ப் பகுதியான மொண்டியில் நாட்டப்பட்டது.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அரசியல் ஆலோசகராகவும் கொள்கை வகுப்பாளராகவும் தத்துவாசிரியராகவும் இறுதிவரை செயல்பட்ட அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு சிலையை நிறுவும் பணியை பிரான்ஸ் தமிழ் பண்பாட்டு வலயம், கார்த்திகை 27 சங்கம் ஆகிய அமைப்புகள் முன்னெடுத்துள்ளன.

பாரிஸ் புறநகரான மொண்டி பூங்காவில் அன்ரன் பாலசிங்கத்தின் சிலையை நிறுவுவதற்கான அனுமதியை மொண்டி நகர சபை வழங்கியுள்ளது.

மொண்டி நகர முதல்வர் ஸ்ரீபன் அர்வில் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் அன்ரன் பாலசிங்கத்தின் சிலைக்கான அடிக்கல்லை நாட்டி வைத்துள்ளனர்.

(அ)

# நடிகை சரோஜா தேவி நேற்றுக் காலமானார்!



சென்னை, ஜூலை 15

இந்தியத் திரையுலகின் பொற்காலத்தை தனது வசீகர நடிப்பால் அலங்கரித்த, பழம்பெரும் நடிகை சரோஜா தேவி நேற்று தனது 87ஆவது வயதில் காலமானார்.

பெங்களூர் மல்லேஸ்வரத்தில் உள்ள அவரது இல்லத்தில், வயது மூப்பு தொடர்பான

11

# 'புலிகளின் குரல்' அறிவிப்பாளர் சத்தியா நேற்று காலமானார்!



யாழ்ப்பாணம், ஜூலை 13

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புலிகளின் குரல் வானொலியின் பிரபல அறிவிப்பாளராக செயல்பட்ட சத்தியா (சிவசுப்பிரமணியம் ஞானகரன்) மாரடைப்பால் காலமானார்.

1990 ஆம் ஆண்டில் புலிகளின் வானொலி தொடங்கி முதலாவது செய்தி ஒலிபரப்பாகிய பொழுது "புலிகளின் குரல் செய்திகள் வாசிப்பவர் சத்தியா" என்று செய்தி வாசித்தவர் அவர்.

புலிகளின்குரல் வானொலியில் செய்தி

11

# கனடிய தூதர் எரிக் வோல்ஷ் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 15

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையில் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இலங்கையில் இருந்து அடுத்த மாதத்துடன்

11

# ரவி, ஷானியை மீண்டும் சேவையில் இணைக்க மல்கம் ரஞ்சித் அழுத்தமா?

## உண்மையை வெளிப்படுத்த கோருகிறது பெரமுன

கொழும்பு, ஜூலை 15

கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டுவரவே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிடுவது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வலியுறுத்தலுக்கு அமைவாகவே ரவி செனவிரத்ன, ஷானி அபேசேகர ஆகியோர் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர் எனக் குறிப்பிடப்படுவதன் உண்மையை பேராயர் வெளிப்படுத்தவேண்டும். அரசாங்கத்தின் போலியான வாக்குறுதிகளுக்கு பேராயர் ஏமாற்றமடையக் கூடாது என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது

11

# அநுர அரசு கவிழ்க்கப்படும்

### ராஜிதவின் புதல்வர்

கொழும்பு, ஜூலை 15

தனது தந்தை ரஜித் சேனாரத்ன கைது செய்யப்பட்டாலும் இல்லாவிட்டாலும், தற்போதைய அரசாங்கம் கவிழ்க்கப்படும் என்று சதுர சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு

11

# பெரும் மக்கள் போராட்டம் எதிர்காலத்தில் உருவாகும்

### ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது



கொழும்பு, ஜூலை 15

எதிர்காலத்தில் மாபெரும் மக்கள் போராட்டம் உருவாகும் அச்சுறுத்தல் நிலை காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

# பயங்கரவாதம் எனும் சொல்லுக்கான வரைவிலக்கணம் அரசின் மீறல்களுக்கும் ஒடுக்குமுறைக்குமே வழிகோலும்

### கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 15

பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு பரந்துபட்ட வரைவிலக்கணம் வழங்கப்படுவதானது நாட்டு மக்களும் செயல்பாட்டாளர்களும் அரசினால் மீறல்களுக்கு உள்ளாக்கப்படுவதற்கு இடமளிப்பதுடன் விமர்சனங்கள் ஒடுக்கப்படுவதற்கும் வழிவகுக்கும் என கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன எச்சரித்துள்ளார்.

அரசாங்கம் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாக நீண்டகாலமாக கடும் விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் உள்ளாகியிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவரும் நிலையிலேயே அரசியலமைப்பு விவகாரங்களில் நிபுணத்துவம் வாய்ந்தவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஜயம்பதி விக்ரமரத்ன மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை செல்லும் மாணவர்களிடையே ஸ்மார்ட்போன் பாவனையை தடை செய்க

## நல்லொழுக்க சம்மேளன ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பானம், ஜூலை 15

பாடசாலை செல்லும் மாணவர்களிடையே கைபேசி (ஸ்மார்ட் போன்) பாவனையை தடை செய்யவேண்டும் எனக் கோரி வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளது.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு-

இந் நாட்டில் தற்பொழுது புகைப்பொருள் பாவனை குறைவடைந்து இருப்பதை காணக் கூடியதாகவுள்ளது. ஆனால், போதைப்பொருள் பாவனை அதிகரித்து செல்வதை காணக் கூடியதாகவுள்ளது. இதனை கட்டுப்படத்துவதற்கு நாம் பாடசாலை மட்டத்திலும் கிராமங்களிலும் செயற்பட்டு வருகின்றோம். ஆனால், போதைப் பாவனை குறைவடைவதை காணக் கூடியதாக தெரியவில்லை. இதனால் கூடுதலாக பாதிப்படைவது இளம் சந்ததியினர் ஆவார் குறிப்பாக மாணவர் சமுதாயம் ஆகும்.

மேலும் இப்படி இருக்கும் பொழுது ஒரு படி மேலாக தற்போது மாணவர்களிடையே ஸ்மார்ட்போன் பாவனையும் காணக் கூடியதாக உள்ளது. இந்த பாவனையை பாடசாலை மாணவர்கள் மட்டில் கட்டுப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். தாங்கள் இலங்கையை துப்புரவு செய்ய முன் வந்ததை மனதார பாராட்டுகின்றோம். இதனைப்போல் கைபேசி பாவனையை மாணவர்களிடையே துப்புரவு செய்ய வேண்டும். அதற்கான சில ஆலோசனைகளை முன்வைக்கின்றோம்.

அவையாவன, பொது இடங்களில் புகைப்பொருள் பாவித்தால் தண்டிக்கப்படுகின்றார்களோ அதேபோல் பாடசாலை செல்லும் மாணவர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் கைபேசியை பொது இடங்களில் பாவித்தால் தண்டிக்கப்பட வேண்டும், குறிப்பிட்ட மாணவர்கள் வீட்டில் கைபேசி பாவிப்பதைக் கண்டால் மாணவர்களின் பெற்றோர்களை தண்டிக்கவேண்டும், பிரத்தியேக வகுப்பு நடத்தும் ஆசிரியர்கள் மெய்நிகர் வழியில் வகுப்பு எடுத்தால் அந்த ஆசிரியரை தண்டிக்கவேண்டும்.

கைபேசி பாவனையை மாணவர்களிடையே தடை செய்ய வேண்டும் இதற்கு காரணம் பெற்றோருக்கு தெரிந்த விடயங்கள் எல்லாம் இந்த போன் மூலம் மாணவர்கள் அறிகின்றார்கள். ஆகவே, கைபேசி பாவனையை தடை செய்யவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-05)

# 14 வயது சிறுமி துஷ்பிரயோகம் புலம்பெயர் நாட்டவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூலை 15

புலம்பெயர் நாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்து 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆலயத்துக்கு சென்ற சிறுமியுடன் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமி பெற்றோருடன் சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்து விசாரணைகளுக்கு பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் குறித்த நபரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (அ)

# வட்டுக்கோட்டை இந்து கல்லூரியில் 'நிஜமும் நிழலும்' இதழ் வெளியீடு!



யாழ்ப்பானம், ஜூலை 15

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் 'நிஜமும் நிழலும்' இதழ் வெளியீட்டு விழாவும் ஊடகக் கண்காட்சியும் நேற்று நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்களுக்கு மலர்மாலை அணிவித்து, அவர்கள் பாரம்பரிய மயிலாட்டம், குதிரையாட்டத்துடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து இறை வணக்கம் இசைக்கப்பட்டு, மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. பின்னர் வரவேற்பு நடனம், தலைமையுரை, விருந்தினர்களின் உரைகள் என்பன இடம்பெற்றன.

அதன்பின்னர் 'நிஜமும் நிழலும்' இதழின் முதற் பிரதியை பாடசாலையின் பதில் அதிபர் வதனி தில்லைச்செல்வன் வெளியிட்டு வைக்க அதனை பிரதம அதிதியாக கலந்து கொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி எஸ். ரகுராம் பெற்றுக் கொண்டார்.

இதழ் வெளியீட்டு நிகழ்வுகள் நிறைவுற்ற பின்னர் ஊடகக் கண்காட்சி ஆரம்பமானது. கண்காட்சி கூடத்தை பிரதம விருந்தினர் நாடா வெட்டி சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். அதன்பின்னர் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் கண்காட்சியைப் பார்வையிட்டனர். (அ)

# ஒதியமலை எல்லை கிராமத்துக்கு பஸ் சேவை நேற்று முதல் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூலை 15

கிளிநொச்சி முதல் முல்லைத்தீவு ஒதியமலை எல்லைக் கிராமத்திற்கான பஸ் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் முல்லைத்தீவு மாவட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைக் கிராம மக்களின் போக்குவரத்து பிரச்னை நேற்று தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

ஒதியமலைக் கிராமம் முதல் கிளிநொச்சி வரையான வழித்தட அனுமதிப்பத்திரம் உள்ள தனியார் பஸ், நீண்ட காலமாக ஒதியமலைக் கிராமத்திற்கு சேவையை வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பில் பல முறைப்பாடுகளும் தெரிவிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் பேசப்பட்டது.

இந்த நிலையில், நேற்று ஒதியமலைக் கிராமத்தில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் பங்கேற்புடன் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஒதியமலை பிள்ளையார் கோவிலில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு, குறித்த பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இராசரத்தினம் கிரிதரன் பங்கேற்றார். (அ)

# ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 15

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கவின் கலை மன்றம் முன்னெடுக்கும் ஆடிப்பிறப்பு விழா நாளை புதன் காலை 8.30 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறும்

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசாலையின் பழைய மாணவியும் கலைக் கோயில் நாட்டிய பள்ளியின் இயக்குநருமான கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார், அதிதி பேச்சாளராக தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடப் பத்திராதிபர் ஜீவா. சஜீவனும் கலந்து கொள்வர்.

# பிரசன்னவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 15

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் போலி ஆவணங்களை தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணியை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பிரசன்ன ரணவீரவை கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. ஆனால், முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று நீண்ட காலமாக தலைமறைவாக இருந்தார்.

பின்னர், முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர கடந்த மே மாதம் 07ஆம் திகதி நீதிமன்றில் சரணடைந்ததையடுத்து தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெள்ளை ஈயை கட்டுப்படுத்தும் செயல் திட்டம் யாழில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 15

'இரு வார கால தீவிர தேசிய கள செயல்பாடு - 2025' என்னும் தொனிப்பொருளில் வெள்ளை ஈ யைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்புடன் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் கச்சாயில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது.

யாழ். மாவட்ட செயலர் ம. பிரதீபன், தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி, தென்னை பயிர் செய்கை சபையின் பொதுமுகாமையாளர் விஜயசிங்க, தென்னை பயிர்ச் செய்கை சபையின் உதவிப் பொது முகாமையாளர் ரி.வைகுந்தன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு.செந்தில்குமரன், விவசாய பிரதி மாகாண பணிப்பாளர் திருமதி எஸ்.அஞ்சனா தேவி உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# வெள்ளை ஈ தாக்கத்தால் யாழ்ப்பானத்தில் ஒன்றரை இலட்சம் தென்னைகள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வெள்ளை ஈ தாக்கத்தால் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் ஒன்றரை இலட்சம் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று திங்கட்கிழமை கச்சாயில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 3 ஆயிரம் மில்லியன் தேங்காய் உற்பத்தியை வருடாந்தம் நாம் எதிர்பார்த்தாலும் அதனை விடக் குறைவாகவே கிடைக்கப்பெறுகின்றது.

வெள்ளை ஈ தாக்கம் உள்ளிட்ட பல்வேறு நோய்த் தாக்கங்கள், விலங்குகளால் ஏற்படுத்தப்படும் சேதம் என பல காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. 2030ஆம் ஆண்டு 4,200 மில்லியன் தேங்காய்களை வருடாந்தம் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்குடன் செயல்படவுள்ளோம்.

வெள்ளை ஈ தாக்கத்தால் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் ஒன்றரை இலட்சம் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நாம் எடுத்துள்ள இந்த முயற்சிக்கு மக்களின் ஒத்துழைப்பு அதிகமாகவே தேவை.

150 இயந்திரங்கள், 150 பணியாளர்களை அழைத்து வந்துள்ளோம். இருப்பினும், ஓர் இயந்திரத்தை இயக்குவதற்கு ஆகக் குறைந்தது 4 பேர் தேவை. எனவே, ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் மக்கள் உதவ வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
15.07.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 31
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அனைவருமாக கடிதம் எழுதுவது...!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு அனைவரும் சேர்ந்து கடிதம் எழுதுவது தொடர்பில் அனைத்து கட்சிக ளுடனும் பேசவுள்ளதாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கிறார். 2021 ஜனவரி மாதம் எழுதிய கடிதத்தை எவ்வித பின்வாங்கலும் இல்லாமல் அனைவரும் கடைப்பிடிக்கும் வகையில் குறித்த கடிதம் அமைய வேண் டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். அதேவேளை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் விசாரணைகளை நடத்துமாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சி கோருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து - கூடவே சிவில் சமூகக் குழுக்களையும் இணைத்துக் கொண்டு ஆணையாளருக்கு கடிதம் எழுதும் விடயத்தில் தவறில்லை. ஏனெனில், அதனைத்தான் தமிழ் கட்சிகளால் செய்ய முடியும். எனவே, தங்களால் இயலுமானதை அவர்கள் செய்வதில் தவறில்லை. ஆனால், நியாயமான விசாரணையை மேற்கொள்ளுங்கள் என்று எவரேனும் அரசாங்கத்திடம் கோரினால் அதனைத் தவறென்று கூறுவதும் தவறானது.

ஏனெனில், இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் ஜனாதிபதி அநுரவிடம் உள்நாட்டு பொறிமுறை தொடர்பான கோரிக்கையைத்தான் முன்வைத்திருக்கிறார். அத்துடன், தமிழ் மக்களுக்கு பிரச்னை இருப்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். இந்த நிலையில், ஆணையாளர் இலங்கையில் கூறிச் சென்றமைக்கு அமைவாக ஒருவர் அரசாங்கத்திடம் விசாரணையைக் கோருவதில் தவறில்லை. மேலும், அதற்கான உரிமை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்டு. அதேபோன்று நாங்கள் ஆணையாருக்கு கடிதம் எழுதப் போகிறோம் என்பவர்களுக்கும் அதற்கான உரிமை உண்டு.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையா ளருக்கு கடிதம் எழுதும் விடயத்தால் எந்தவொரு சாதகமான விளைவும் ஏற்பட போவதில்லை. இது கடிதத்தில் கையெழுத்திடுபவர்களுக்கும் தெரியும். இதில், வேடிக்கை என்னவென்றால் கடந்த காலத்தில் சில கடிதங்களை எழுதி விட்டு தங்களின் கடிதத்தில் இருக்கும் விடயங்கள் ஆணையாளரின் அறிக்கையில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன என்று கூறியவர்களே பரிதா பத்துக்குரியவர்கள்.

உண்மையில், இன்று காஸாவில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது நேரலையில் காட்சிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஈழப் போர் முடிவுற்றதன் பின்னர்தான் சனல் - 4 மூலம் சில காட்சிகள் உலகத்தின் பார்வைக்கு சென்றன. ஆனால், போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே மக்கள் இறப்பதையும் காயப்படுவதையும் உணவின்றி குழந்தைகள் அழுவதையும் உலகம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. பலஸ்தீனத் துக்கு ஆதரவாகவும் இஸ்ரேலுக்கு எதிராகவும் அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட பல நாடுகளில் பல்லாயிரக்கணக்கான பலஸ்தீனிய ஆதரவாளர்கள் வீதிகளில் நிற்கின்றனர். ஆனாலும், யுத்தத்தைத் தடுத்து நிறுத்த முடிய வில்லை. இது எதனை உணர்த்துகிறது? ஹமாஸுக்கு எதிரான சிந்த னையின் அடிப்படையிலேயே உலகின் பலம் பொருந்திய நாடுகள் தங்களின் முடிவுகளை எடுத்திருக்கின்றன. நாடுகளின் தீர்மானங்களுக்கு அமைவாகவே விடயங்கள் இடம்பெறுகின்றன. இதில் ஐக்கிய நாடுகள் சபை என்பது வெறும் பார்வையாளர் மட்டும்தான்.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் கடிதங்கள் எழுதுவதால் ஒரு சிறிய பய னும் ஏற்பட் போவதில்லை. எனினும், தமிழ் கட்சிகளால் இதனை விடவும் வேறு எதைத்தான் செய்ய முடியும் என்னும் கேள்விக்கு பதிலில்லாத போது கடிதம்தான் ஒரேயோர் ஆறுதலாக இருக்க முடியும்.

# போதைப்பொருள் சுற்றிவளைப்புக்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் கைது

கொழும்பு, ஜூலை 15

கடந்த 7 மாத காலப் பகுதியில் போதைப் பொரு ளுக்கு எதிராக முன்னெ டுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது ஒரு இலட்சத்துக்கும் அதிக மானோர் கைது செய்யப்பட் டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு. வூட்லர் தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

பதில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய கடந்த மூன்று மாத காலமாக முன்னெடுக்கப் பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக் கைகளுக்கு அமைய 302 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருட்களும் 104 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருளும் 2,641 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளும் பொலி ஸாரினால் கைப்பற்றப்பட் டுள்ளது. அதற்கமைய 35,442 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இம்மா தம் 11ஆம் திகதி வரை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுத்த விசேட போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கை களின்போது 922 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் 1,386 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொரு ளும், 10,895 கிலோகிராம் கஞ்சாபோதைப்பொருளும் 22 கிலோகிராம் கொக் கெய்ன் மற்றும் 329 கிலோ கிராம் ஹேஷ் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன. இவைகளுடன் தொடர்பு டைய ஒரு இலட்சத்து 6 ஆயிரம் பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்-என்றார். (அ)

# வவுனியாவில் வீதியோரத்தில் உள்ள கடைகளை அகற்றும் மாநகர சபை!

## வியாபாரிகள் - சபை ஊழியர்கள் முரண்பாடு

வவுனியா, ஜூலை 15

வவுனியாவில் நடைபாதை வியாபார கொட்டகைகளை அகற்றும் செயற்பாட்டின் போது முறுகல் நிலை ஏற்பட்டது.

வவுனியா இலுப்பையடி பகுதி மற்றும் வைத்திய சாலை சுற்றுவட்ட வீதியில் நீண்ட காலமாக நடைபாதை வியாபாரிகள் வியாபாரம் செய்து வந்திருந்த நிலையில் வவுனியா மாநகர சபையி னால் அதனை அகற்றும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

போக்குவரத்துக்கு இடையூறாகவும் மக்கள் நடமாடுவதற்கு இடைஞ் சலாகவும் குறித்த நடை பாதை வியாபாரம் காணப்படுவதாக தெரிவித்து மாநகர சபையால் இதனை அகற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாக மாநகர முதல்வர் சு. காண் டீபன் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக குறித்த நடைபாதை வியாபாரிகள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தபோது அங்கு வருகை தந்த மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பொலி ஸார் மற்றும் விசேட அதிர டிப் படையினர் இணைந்து நடைபாதை வியாபாரத்தை அகற்றும் செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

இதன்போது மாநகர சபை முதல்வர் உட்பட உறுப்பினர்கள், பொலி ஸாருடன் வியாபாரிகள் முரண்பட்டுக் கொண்டனர்.

நீண்ட நேரமாக வியாபா ரிகளுக்கும் பொலிஸார் மற்றும் மாநகரசபை ஊழியர் களுக்கும் இடையில் தள்ளு முள்ளு ஏற்பட்டதோடு முரண்பாடுகளும் ஏற்பட்டிருந்தன.


தமக்கான கால அவகாசம் வேண்டும் என வியாபாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் மாநகர சபை முதல்வர் சு. காண்டீபன், ஏற்கனவே போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டி ருந்ததாகவும் ஏப்ரல் மாதத் தோடு இந்த வியாபார நிலையங்களை அகற்றுவதாக தெரிவித்து இருந்தபோதிலும் அதனை அகற்றாமல் தற்போது இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் இவ்வாறான நடவடிக்கையை தாம் மேற்கொண்டு இருப்பதால் இனி கால அவகாசம் வழங்க முடியாது எனவும் தெரிவித்தார்.

எனினும், அதன் பின்ன ரும் சில வியாபாரிகள் முரண்பட்டுக் கொண்டிருந்த நிலையில் பொலிஸாரும் தலையிட்டு இதனை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் வியாபாரிகளை கடைகளை அகற்றுமாறு தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து வியா பாரிகள் உடன்பாட்டுக்கு வந்து வீதியோரத்தில் போடப்பட்டிருந்த தற்காலிக கொட்டகைகளை அகற்றினர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 15 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 31
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : பஞ்சமி




**மேடம்**
எதிர்பார்ப்புகள் நிறை வேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும்.

**இடபம்**
உணர்ச்சி வசப்பட்டு பேசு வதை விட்டு அறிவுப் பூர்வமாகப் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச் னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். உறவினர்களிடம் முன்கோபத்தால் பகை உண்டாகும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்தபொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழியில் உறவினர்கள் மதிப்பார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். அழகும் இளமையும் கூடும். வேற்றுமதத்தவர்கள் நண்பர்கள் ஆவார்கள்.

**விருட்சிகம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**தனுசு**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத் தில் கிடைக்கும். உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான பல வேலைகளை பார்க்க வேண்டி வரும். சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள்.

**மீனம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உடல் அசதி, சோர்வு வந்து விலகும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

# ஆசிரியர்கள் இடமாற்றம் சட்டரீதியாக சவாலுக்கு உட்படுத்தப்படும் அபாயம்

## பிரதியமைச்சர் மகிந்த ஜயசிங்க



யாழ்ப்பாணம், ஜூலை 15

அனுமதியற்ற தொழிற் சங்கப் பிரதிநிதிகள் இடமாற்றச் சபையில் இடம்பெற்றிருந்தால் அவர்கள் ஊடாக வழங்கப்படும் இடமாற்றம் சட்டரீதியாக சவாலுக்கு உட்படுத்தப்படும் அபாயம் உள்ளதாக பிரதியமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

எனவே, ஆசிரியர் இடமாற்றச் சபையில் பதிவு செய்யப்பட்ட இயங்குநிலையிலுள்ள தொழிற்சங்கங்களுக்கு மாத்திரமே இடமாற்றச் சபையில் அனுமதி வழங்க வேண்டும். வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் சகல வலயங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட தொழிற்சங்களின் விவரங்களை அனுப்ப வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது, தேசிய இடமாற்றக் கொள்கையுடன் வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கை சில இடங்களில் ஒத்துச்செல்லவில்லை. வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கை இன்னமும் வினைத்திறனாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என ஆசிரிய சேவைச் சங்கத்தினர் வலியுறுத்தினர். சேவையின் தேவை கருதிய இடமாற்றங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களால் வழங்கப்படும்போது அது தொடர்பில் 14 நாட்களுக்குள் இடமாற்றச் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டனர். இதை நடைமுறைப் படுத்துமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களை அறிவுறுத்தினார்.

இடமாற்றங்களின்போது அரசியல் தலையீடுகளுக்கு அனுமதியளிக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்த ஆசிரியர் சேவைச் சங்கத்தினர், அதிபர்கள் - ஆசிரியர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். மேலும் ஆசிரியர்களால், அதிபர்களால் திணைக்களங்களில் ஒப்படைக்கப்படுகின்ற ஆவணங்களுக்கு பெற்றுக்கொண்டமைக்கான உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்படவேண்டும் எனவும் முன்வைத்த கோரிக்கையை செயல்படுத்துவதாக கல்வி அமைச்சின் செயலர் குறிப்பிட்டார். (எ)

# மூளாய் சைவப்பிரகாச மாணவிக்கு 9ஏ



யாழ்ப்பாணம், ஜூலை 15

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவி ஜ. நிரோஜா 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்.

9ஏ சித்திகளைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்த மாணவிக்கு அதிபர் பா. பாலசுப்பிரமணியம் பணப்பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

இதே பாடசாலை மாணவர்கள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் வருமாறு:- த. பிரணவி 7ஏ 2பி, பு. தேனுஜன் 6ஏ பி 2சி, செ. ஆதீசன் ஏ 3பி 4சி எஸ், சி. சியானா ஏ 4பி 3சி எஸ், ஜீ. கலையரசன் ஏ 2பி 3சி 2எஸ் (எ-05)

# "வன்னி பிரதேசத்துக்கு வரவேண்டிய ஆசிரியர்கள் இன்னமும் வரவில்லை"

யாழ்ப்பாணம், ஜூலை 15

வன்னிப் பிரதேசத்திலுள்ள வலயங்களிலிருந்து ஆசிரியர்கள் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் பதிலீடாக வரவேண்டிய ஆசிரியர்கள் இன்னமும் வரவில்லை. இதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நிலையில், இடமாற்றம் வழங்கப்பட்டவர்களை நாளை புதன்கிழமையுடன் தற்போதுள்ள வலயங்களில் சேவையை முடிவுறுத்தி புதிய நிலையங்களில் பொறுப்பேற்பதற்கான ஒழுங்குகளை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என ஆளுநர் நா. வேதநாயகன் வலியுறுத்தினார்.

அரசாங்கம் எதிர்காலத்தில் பிரதேச மாணவர்களின் கல்வியைப் பாதிக்காத வகையில், கொத்தணிப் பாடசாலை முறைமைய வலுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் இதனூடாக அதிபர், ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பான விவகாரத்தை தணிக்க முடியும் என நம்புவதாக பிரதியமைச்சர் மகிந்த ஜயசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை, மாணவர்களின் கல்வியை வளர்த்தெடுப்பது தொடர்பிலேயே சிந்திக்க வேண்டும். ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் தங்கள் சுகபோகங்களையும் வசதி வாய்ப்புக்களையும் நோக்கமாகக் கொண்டு செயல்படக்கூடாது என்று பிரதியமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டார். மாணவர்களின் கல்விக்காக சில விட்டுக்கொடுப்புக்களையும், கஷ்டங்களையும் ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் தாங்கிக் கொள்ளவேண்டும் எனவும் அவ்வாறில்லாவிட்டால் வடக்கு மாகாணத்தை கல்வியில் உயர்த்துவது கடினம் என்றும் குறிப்பிட்டார்.

பாடசாலைக்கான அனுமதிகளில் சில இடங்களில் பாரபட்சம் காட்டப்படுவது தொடர்பில் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறானதொரு விடயத்துக்கு தயவு தாட்சணயமின்றி நடவடிக்கை எடுக்குமாறு பிரதியமைச்சர் மகிந்த ஜயசிங்க கோரினார். அவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் உறுதியளித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரக் பண்டா ஹெரோயினுடன் கைது

கொழும்பு, ஜூலை 15

கிராதுருகோட்டை பகுதியில் போதைப்பொருள் கடத்தல்காரரான "ஹரக் பண்டா" என அழைக்கப்படும் நபரொருவர் கைதுசெய்யப் பட்டுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான ஹரக் பண்டா நீண்ட காலமாக ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருவதாகவும், தற்போது அவர் மஹியங்கனை - பதியதலாவ வீதியில் 51ஆவது மைல் கல்லுக்கு அருகாமையில் உள்ள சந்தி பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருப்பதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபரான ஹரக் பண்டா 5300 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹியங்கனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ப்ரோபோ டபிள்யூ.டபிள்யூ. எம். விஜேரத்ன தலைமையில் பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை மஹியங்கனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## ரம்புட்டான், மங்குஸ்தான் பழங்களின் தோல்கள் அகற்றுவதில் கவனம் தேவை

### வைத்தியர் தீபால் பெரேரா

கொழும்பு, ஜூலை 15

தற்போதைய பருவ காலத்தில் அதிகமாக கிடைக்கும் ரம்புட்டான் மற்றும் மங்குஸ்தான் பழங்களின் தோல்கள் டெங்கு நோய்க்கான நுளம்புகள் இனப்பெருக்கத்துக்கு ஏற்ற சூழலை உருவாக்கக்கூடும் என பொரளை லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் வைத்தியசாலையின் குழந்தை மருத்துவ நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இத்துடன், பலர் இந்த பழங்களின் தோல்களை வீதியோரங்களிலும், வீடுகளின் வெவ்வேறு இடங்களிலும் வீசுவதால், அவை, டெங்கு நுளம்பு இனப்பெருக்கத்துக்கு வழிவகுக்கும் என்பதால், குறித்த பழங்களின் தோல்களை அப்புறப்படுத்துவதில் கவனம் செலுத்துமாறு வைத்தியர்



தீபால் பெரேரா வேண்டுகோள் வைத்துள்ளார்.

டெங்கு நுளம்புகள், இனப்பெருக்கம் செய்ய மங்குஸ்தான், ரம்புட்டான் ஆகியவற்றின் பழத்தோல்கள் போன்ற குறைந்த அளவிலான நீர்தேங்கும் இடம் போதுமானது என்பதால், அவை டெங்கு நுளம்புகள் பெருக உகந்த இடமாக அமையும் என வைத்தியர் தீபால் பெரேரா மேலும் கூறினார். (அ)

## மிரிஸ்ஸ கடலில் மூழ்கிய 2 வெளிநாட்டவர்கள் மீட்பு!

கொழும்பு, ஜூலை 15

மிரிஸ்ஸ கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகள் கொடவில பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுவனும் 17 வயதுடைய யுவதியுமே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் மிரிஸ்ஸ கடலில் நீராடிக்கொண்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கியுள்ளனர்.

இதன்போது அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த கொடவில பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர், கடலில் மூழ்கிய இரு வெளிநாட்டுப் பிரஜைகளையும் காப்பாற்றி அவர்களுக்கு முதலுதவி அளித்துள்ளனர். (அ)

## வெற்றிடமாகவுள்ளது பிரதம நீதியரசர் பதவி

கொழும்பு, ஜூலை 15

பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ இந்த மாத இறுதியில் ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவர் எதிர்வரும் 27 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய முர்து பெர்னாண்டோ, கடந்த 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கையின் 48 ஆவது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

இந்தநிலையில், அவரது ஓய்வை அடுத்து, இலங்கை அரசியலமைப்புச் சபையின் அனுமதியுடன், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதி பிரதம நீதியரசருக்கான பரிந்துரையை முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் புதிய ஆட்சேர்ப்பு எதுவும் இல்லை

### முகாமைத்துவப் பணிப்பாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு புதிய ஆட்சேர்ப்புகள் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.**

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம், நிறுவனத்திற்குள் மனித வளங்களைக் குறைக்க முடிந்ததாக அவர் தெரிவித்தார்.

மேலும் கருத்துக்களை வெளிப்படுத்திய அவர், தற்போது பணிபுரிபவர்கள் தங்களது தொழில் குறித்து அச்சமடையத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்லை-2012 ஆம் ஆண்டில், இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தில் சுமார் 3,290 ஊழியர்கள் இருந்தனர். ஆனால் தற்போது பல விடயங்களுக்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த நாம் திட்டமிட்டுள்ளோம். முன்பு போல பலர் பணிபுரிய வேண்டிய தேவை இருக்காது. எங்கள் புதிய பணியாளர் கட்டமைப்பின் படி, தற்போதுள்ள சுமார் 3,290 மனிதவளம் 2,031 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஊழியர்களில் பலர் இந்த வருடமும் அடுத்த வருடமும் ஓய்வு பெறுவார்கள். அவர்கள் ஓய்வு பெறும்போது, புதியவர்கள் வருவதில்லை. புதிய ஆட்சேர்ப்புகளை நிறுத்திவிட்டோம். பல திறமையற்ற சேவைகளை நிறுத்திவிட்டோம். எனவே, இப்போது அந்த நபர்களின் தேவைப்பாடு எமக்கு அவசியப்படாது.- என்றார். (அ)

## பல்லேகல சிறைக்கு புதிய அதிகாரி நியமனம்

கொழும்பு, ஜூலை 15

கண்டியிலுள்ள பல்லேகல சிறைச்சாலைக்கு புதிய சிறைச்சாலை அதிகாரியாக எல்.பீ. வர்ணகுல சூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

போகம்பரை சிறையின் சிறைச்சாலை அதிகாரியாக ஏற்கனவே கடமையாற்றிய ஏ.கஜநாயக்க தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

எல்.பீ.வர்ணகுல சூரிய கண்டி திருத்துவக் கல்லூரியின் பழைய மாணவராவார். 1998 ஆம் ஆண்டு இவர் ஜெய்லர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இவர் பொலனறுவை, குருவிட்ட, வட்டரெக்க, போகம்பரை, வாரியப் பொல உட்பட பல இடங்களிலுமுள்ள சிறைச்சாலைகளில் பல்வேறு பதவிகளை வகித்தவர் ஆவார். (அ)

## சுஜீவ சேனசிங்க நேற்று சி.ஐ.டியில் முன்னிலை!

கொழும்பு, ஜூலை 15

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான சுஜீவ சேனசிங்க குற்றப் புல னாய்வு திணைக்களத்தில் நேற்று திங்கட்கிழமை காலை முன்னிலையானார்.

சுஜீவ சேனசிங்க பயன்படுத்திய சர்ச்சைக்குரிய சொகுசு வாகனம் தொடர்பான விசாரணைகளுக்கு வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்போது குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், சுஜீவ சேனசிங்கவிடமிருந்து 3 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் சுஜீவ சேனசிங்க குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இருந்து வெளியேறினர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

## துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 15

அநுராதபுரத்தில் திறப்பனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏறுவெவ பிரதேசத்தில் இரண்டு துப்பாக்கிகளுடன் சந்தேக நபர் ஒருவர் திறப்பனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திறப்பனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் திறப்பனை, லபுநொருவ பிரதேசத்தில் சேர்ந்த 42 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் வெளிநாட்டுத் துப்பாக்கி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திறப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கடும் காற்று, கடல் கொந்தளிப்பு மீனவருக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 15

சிலாபம் முதல் புத்தளம் ஊடாக மன்னார் வரையிலும், காலி முதல் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலும் உள்ள பகுதிகளுக்கு பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள சிவப்பு எச்சரிக்கையில்-

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் மேற்குத் திசையில் இருந்து தென்மேற்குத் திசையை நோக்கி காற்று வீசும்.

சிலாபம் தொடக்கம் புத்தளம் ஊடாக மன்னார் வரையான அத்துடன் காலி தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் வீசும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும்.

சிலாபம் தொடக்கம் கொழும்பு ஊடாக காலி வரையான அத்துடன் மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை, திருகோணமலை ஊடாக வாகரை வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் இடைக்கிடையே காற்று அதிகரித்து வீசக் வீசும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் கடல் அலையானது சுமார் 2.5 - 3.0 மீற்றர் உயரத்திற்கு மேலெழக்கூடும். இதே வேளை இக் கடல் பிராந்தியங்களை அண்மித்த தரைப் பிரதேசத்திற்கு கடல்நீர் உட்புகக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஆகையினால் கடலுக்கு செல்லும் மீனவர்களும் கடல்சார் ஊழியர்களும் அவதானத்துடன் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை மாற்றமில்லை!

## அஜித் பெரேரா கூறுகிறார்



கொழும்பு, ஜுலை 15

**ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப் பதவியில் மாற்றம் வராது எனவும்,மாகாணசபைத் தேர்தலின்போது கட்சி மீண்டெழும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவியில் மாற்றம் வேண்டும் என அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அஜித் பி. பெரேரா எம்.பி.,

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாச செயற்படுகின்றார். அதில் மாற்றம் வராது.

நாடாளுமன்ற தேர்தலை விடவும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் சிறந்த பெறுபேறு கிட்டியுள்ளது. மாகாணசபைத் தேர்தலில் தனிக்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி மீண்டெழும்.

கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு சஜித்தால் ஏற்பட்டது அல்ல. கோட்டாபய ராஜபக்ச தப்பியோடியதால்தான் புதிய தரப்பொன்றுக்கு ஆட்சியை வழங்கும் முடிவை மக்கள் எடுத்தனர்.

கட்சியில் நிர்வாக தரத்தில் மாற்றம் வரும். ஆனால் தலைமைப்பதவியில் மாற்றம் வராது."-என்று குறிப்பிட்டார்.

அத்துடன், மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அஞ்சுகின்றது. தோல்வி பயத்தால் அதனை பிற்போடுவதற்கு முற்படுகின்றது.

எனினும், தேர்தலை நடத்துமாறு சர்வதேச மற்றும் சமூக அழுத்தங்கள் வரக்கூடும்."-என அஜித் பி பெரேரா மேலும் குறிப்பிட்டார். (அ)

# பரீட்சை பெறுபேற்றை மாத்திரம் வைத்து கல்வியை அளவிடும் முறைமை தவறானது

## பிரதமர் ஹரிணி அமரசூரிய சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜுலை 15

பரீட்சை பெறுபேறுகளை மாத்திரம் வைத்து கல்வியை அளவிடும் முறைமை மிகவும் தவறானது எனவும், அந்த முறைமை மாற்றப்பட வேண்டுமெனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பொலனறுவை றோயல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போது, அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அனைத்து தரப்பினரும் கல்வி குறித்து குறுகிய பார்வையைக் கொண்டிருப்பதாகப் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறைமையினை மாற்றுவதன் மூலம், மாணவர்கள் தங்களது திறமைகளுடன் முன்னேறுவதற்கு உதவும் கல்வி முறைமையினை உருவாக்குவதற்கு உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், படைப்பாற்றல் மற்றும் மனிதாபிமானம் கொண்ட சிறுவர்களை வளர்ப்பதே தங்களது நோக்கமாகும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய இதன் போது குறிப்பிட்டார். (அ)

# முன்னாள் அமைச்சர் ராஜித முன்பிணை கோரிக்கை மனு

கொழும்பு, ஜுலை 15

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தன்னை கைது செய்வதற்கு முன்னதாக, தன்னை முன்பிணையில் விடுவிக்கக் கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன் பிணை கோரிக்கை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலித்த கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு மனு அனுப்ப உத்தரவிட்டார். இதன்படி, 18ஆம் திகதி நீதிமன்றத்தில் வழக்கு தொடருமாறு கேட்டுக் கொண்டார். (அ)

# அநுர ஆட்சியில் மலையகத்தில் இதுவரை எதுவும் நடக்கவில்லை!

## கூறுகிறார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, ஜுலை 15

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் மலையக மக்களுக்காக இதுவரை எதுவும் செய்யப்படவில்லை. காணி, வீடு குறித்து உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை நிறைவேற்றப்படவில்லை என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்கள் கடந்துவிட்டன. எனினும், கல்வித்துறையில் பாரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் அவர்கள் இன்னும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கல்வி மறுசீரமைப்புக்காக அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் மலையகத்தில் எதுவும் நடக்கவில்லை. வீடு கட்டவில்லை. காணி வழங்கப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. பொருட்களின் விலை எகிறியுள்ளது. பாடசாலைகளில் இடைவிலகல் அதிகரித்துள்ளது.

தம்மைதவிர ஏனையோர் அனைவரும் திருடர்கள் எனக்கூறியே தேசிய மக்கள் சக்தி வாக்கு கேட்டது. ஆனால் உள்ளூராட்சிசபைகளில் ஆட்சி அமைப்பதற்கு தற்போது அனைவருடனும் கூட்டு சேர்கின்றனர். ஆட்சி அதிகாரத்துக்காக அவர்கள் எல்லாவற்றையும் செய்கின்றனர். இப்படியானவர்கள் எவ்வாறு கள்வர்களைப் பிடிப்பார்கள்?

நாட்டில் பாதுகாப்பு நிலை வரமும் மோசமாக உள்ளது. நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய செவ்வந்திகூட இன்னும் கைது செய்யப்படவில்லை. நாட்டில் சுகாதாரத்துறையும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் இன்று கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். நெல் உற்பத்தி இல்லை. தேயிலை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. கிழங்கு, வெங்காயம், மரக்கறி உற்பத்தியும் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் நிர்க்கதியாகியுள்ளனர். இந்நிலைமை தொடர்ந்தால் இன்னும் 10 வருடங்களில் விவசாயம் கைவிடப்படலாம்-என்றார்.

# வினைத்திறனான அரச சேவையை உருவாக்க ஐ.நா. சபையின் அபிவிருத்தித் திட்டம் ஆதரவு



கொழும்பு, ஜுலை 15

வினைத்திறனான அரச சேவையை உருவாக்குவதற்காக அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் திட்டத்திற்கு ஆதரவளிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்தபோது அசுசா குபோடா இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்து அரச நிறுவனங்களிலும் பயனுள்ள அரச சேவைகளை வழங்குவதற்காக உள் விவகார அலகுகளை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் முன்னெடுப்புக்கள் மேலும் மேம்படுத்துவது மற்றும் பணியாளர் பயிற்சிக்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்திலிருந்து கூடுதல் ஆதரவைப் பெறுவது குறித்து இதன் போது ஆராயப்பட்டது.

இந்த அலகுகளை நிறுவுவது ஊழலைத் தடுக்கவும், அரசு நிறுவனங்களில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்யவும், நெறிமுறை நிர்வாகத்தை ஊக்குவிக்கவும், லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுடன் இணைந்து சட்ட அமுலாக்கத்தில் உதவவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அரச அதிகாரிகளின் நெறிமுறை நடத்தையை மேம்படுத்துவதன் மூலம் அரச நிறுவனங்களுக்குள் ஒருமைப்பாட்டின் கலாசாரத்தை வளர்ப்பதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டது. அந்த திட்டங்களுக்கு ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக அசுசா குபோடா ஜனாதிபதியின் செயலாளரிடம் உறுதியளித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் சர்வதேச நிபுணரும், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் இஸ்தான்புல் ஊழல் எதிர்ப்பு செயல் திட்டத்தின் தலைவருமான டிராகோ கோஸ் மற்றும் ஊழல் எதிர்ப்பு நிபுணர் தம்மிக தசநாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (அ)

# வெற்றிலை பாக்கின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜுலை 15

சந்தையில் வெற்றிலையின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, பெரிய வெற்றிலை ஒன்று 10 ரூபாவுக்கும், சிறிய வெற்றிலை ஒன்று 7 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், வெற்றிலை மாத்திரமன்றி பாக்கின் விலையும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், வெற்றிலை மற்றும் பாக்கு விற்பனை குறைவடைந்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# கடந்த ஏழு மாதங்களில் மட்டும் 922 கிலோ ஹெரோயின் பறிமுதல்

கொழும்பு, ஜுலை 15

இந்த ஆண்டின் கடந்த ஏழு மாதங்களில் இலங்கை பொலிஸார் மற்றும் முப்படையினர் இணைந்து நாடு முழுவதும் நடத்திய கூட்டு நடவடிக்கைகளின் போது மொத்தம் 922 கிலோ கிராம் ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சருமான எவ்.யூ. வூட்லர் இந்த விடயத்தைக் கூறினார்.

இந்த கூட்டு நடவடிக்கைகள் 2025 ஜனவரி 1, முதல் 2025 ஜுலை 11 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இந்தக் காலக்கட்டத்தில் அதிகாரிகள் 1,386 கிலோ கிராம் ஐஸ், 10,895 கிலோ கிராம் கஞ்சா, 22 கிலோ கிராம் கொக்கெய்ன் மற்றும் 329 கிலோ கிராம் ஹாஷ் போன்ற போதைப்பொருட்களை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின் போது சுமார் 106,000 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.2025 ஏப்ரல் 13 முதல் 2025 ஜுலை 12 வரை நடத்தப்பட்ட சிறப்பு குற்ற நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 35,442 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் இதன்போது கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்த 7 மாதங்களில் 68 துப்பாக்கிச்சூடுகள்!

## 37 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 15

**இந்த வருடத்தில் கடந்த 7 மாதங்களில் நாடு முழுவதும் 68 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.**

நேற்று பொலிஸ் ஊடகப் பிரிவின் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு.வுட்லர் இதனைத் தெரிவித்தார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நேற்று முன்தினம் வரை பதிவாகியுள்ளதாகவும், அவற்றில் 50 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுடன் தொடர்புடையவை என்றும், ஏனைய 18 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் தனிப்பட்ட காரணங்களுக்காக இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை, மேற்படி 68 துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 37 பேர் உயிரிழந்ததாகவும், அவர்களில் 34 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் என்றும், துப்பாக்கிச் சூட்டில் 39 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் 30 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த துப்பாக்கிச் சூடுகள் தொடர்பில் பொலிஸார் நடத்திய விசேட நடவடிக்கைகளின் போது, ரி-56 ரக துப்பாக்கிகள் 23 , கைத்துப்பாக்கிகள் 46 மற்றும் 1,165 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸ் ஊடகப்பேச்சாளர், 68 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் துப்பாக்கிச் சூடு நடத்திய 24 பேர், ஓட்டுநர்களாக செயல்பட்ட 15 பேர் மற்றும் அவர்களுக்கு ஆதரவளித்த 150 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# துமிந்த திசாநாயக்கவுக்கு நிபந்தனைகளுடன் பிணை!

கொழும்பு, ஜூலை 15

கொழும்பு, ஹேவ்லொக் டவுனில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய நீதிமன்ற நடவடிக்கைகளின்போது, முன்னாள் அமைச்சர் கடுமையான பிணை நிபந்தனைகளின் கீழ் விடுவிக்கப்பட்டார்.

வெள்ளவத்தையில் உள்ள ஹவ்லொக் சிற்றி அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 துப்பாக்கி தொடர்பாக முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க கடந்த மே மாதம் கைது செய்யப்பட்டார்.

ஆயுதம் வைத்திருந்ததாக 40 மற்றும் 68 வயதுடைய இரண்டு பெண்கள் முதலில் கைது செய்யப்பட்டனர்.

துப்பாக்கி தொடர்பான விசாரணைகள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டன.

அதன் பிறகு முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நரம்பியல் நிபுணர் மஹேஷிக்கு எதிராக பாதிப்புற்ற 100 பேரிடமிருந்து முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 15

விசேட நரம்பியல் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் மஹேஷி விஜேரத்னவின் சத்திர சிகிச்சைக்குள்ளாகி பாதிக்கப்பட்ட நூறு பேரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இவ்விடயம் குறித்து அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தியுள்ளதால், இது தொடர்பான தகவல்களை அறிவிக்குமாறும் பொது மக்கள் கோரப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தகவல்கள் இருப்பின் 1954 என்ற துரித இலக்கம் அல்லது ciaboc_gen@ciaboc.gov.lk. என்ற இணைய முகவரியின் ஊடாக அறிவிக்க முடியுமெனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. வைத்திய நிபுணர் மஹேஷி விஜேரத்ன சத்திர சிகிச்சைகளுக்கு தேவையான மருத்துவ உபகரணங்களை வெளி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முயற்சித்து, நோயாளிகளுக்கு அதிக செலவை ஏற்படுத்தியமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளும் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. இதே வேளை கடந்த மாதம் 17ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட வைத்திய நிபுணர் மஹேஷி விஜேரத்ன எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பேருந்து விபத்தில் நான்கு பேர் காயம்

கொழும்பு, ஜூலை 15

மஹரகம, நாவின்ன பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாக மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

நாவின்ன பேருந்து நிறுத்தத்திலிருந்து பிரதான வீதிக்குள் நுழைந்த பேருந்து, மஹரகமவிலிருந்து கொழும்பு நோக்கி பிரதான வீதியில் பயணித்த மற்றொரு பேருந்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் தற்போது களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## விபத்தில் இருவர் பலி!

கொழும்பு, ஜூலை 15

கம்பஹா பகுதியில் பேருந்து ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

25 மற்றும் 35 வயதுடைய இருவரே சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளதுடன் விபத்து தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்லேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீரிகம-பஸ்யால பிரதான வீதியின் மல்லேஹெவ பிரதேசத்தில் நேற்று மீரிகவிலிருந்து பஸ்யால நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்து எதிர்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது பலத்த காயமடைந்த மோட்டார்சைக்கிளின் ஓட்டுநர் மற்றும் பின்னால் அமர்ந்து பயணித்த நபரும் வதுப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

25 மற்றும் 35 வயதுடைய அமிதிரிகல மற்றும் தெஹியோவிட்ட பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. விபத்து சம்பவம் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# பறவைகள் சரணலாய முகாமையாளர் கைது!

கொழும்பு, ஜூலை 15

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகக்கூறப்படும் 20 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான அதிநவீன ரக 21 மோட்டார்சைக்கிள்களுடன் கைது செய்யப்பட்ட அம்பாந்தோட்டை பறவைகள் சரணலாயத்தின் முகாமையாளர் உள்ளிட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் நேற்று முன் தினம் அம்பாந்தோட்டை பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு இதன் போது நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

பதில் பொலிஸ் மா அதிபருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய. மத்திய குற்ற விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கமல் ஆரியவங்ச தலைமையிலான பொலிஸ் குழுவொன்று அம்பாந்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகரவெ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் விசேட நடவடிக்கையொன்றை மேற்கொண்டிருந்தது.

இதற்கமைய நாகரவெ பறவைகள் சரணாலய வளாகத்தின் உணவு களஞ்சியசாலையில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த அதிநவீன ரக 21 மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டிருந்தன.

இவை இறக்குமதிக்கு தடை செய்யப்பட்டிருந்ததாகவும் ஒரு மோட்டார்சைக்கிள் ஒன்றின் பெறுமதி ஒன்றரைக் கோடி ரூபாவுக்கும் அதிகம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் பறவைகள் சரணாலயத்தில் பயிரிடப்பட்டிருந்த 4 கஞ்சா செடிகளும் மீட்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த சரணாலயத்தின் முகாமையாளர் மற்றும் களஞ்சியாலையின் கட்டுப்பாட்டாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்கள் அம்பாந்தோட்டை பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளனர்.

40 மற்றும் 50 வயதுடைய இருவரே சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் மாத்தறை மற்றும் மித்தெணிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (அ)

# மது விருந்தில் வாய்த்தர்க்கம் கைகலப்பாகி ஒருவர் கொலை

கொழும்பு, ஜூலை 15

கம்புறுபிட்டிய பகுதியில் மதுவிருந்தொன்றில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் நீண்டு கைகலப்பாக மாறியதில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த மற்றொரு நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை கம்புறுபிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாஹேன பகுதியில் மதுவிருந்தொன்றில் கலந்து கொண்டிருந்த நண்பர்களிடையே வாய்த்தர்க்கம் நீண்டு கைகலப்பாக மாறியுள்ளது. இதன்போது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இருவர் படுகாயமடைந்துள்ளதுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் காயமடைந்தவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் காயமடைந்த மற்றைய நபர் கம்புறுபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதுடன், சம்பவத்தை அடுத்து தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

40 வயதுடைய யஹலகொட பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், 42 வயதுடைய கரபுட்டுகல பகுதியை சேர்ந்த நபர் காயமடைந்துள்ளார்.

# சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூலை 15

2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின்படி, 237,026 மாணவர்கள் உயர் தரத்திற்குத் தகுதி பெற்றுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி தெரிவித்தார்.

இம்முறை பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 73.45 வீதமானவர்கள் உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண சம்பியனாக காரைதீவு ஹொக்கி அணி



காரைதீவு, ஜூலை 15

கிழக்கு மாகாண ஹொக்கி அணிகளுக்கு இடையிலான போட்டியில் அம்பாறை மாவட்ட அணியான காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிவாகை சூடி கிழக்கு மாகாண சம்பியனாக மீண்டும் தெரிவாகியுள்ளது.

இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக ஏழு தடவைகள் மாகாண சம்பியனாக காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி தெரிவாகியுள்ளது.

இம் மாகாண மட்ட போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அம்பாறை பொது மைதானத்தில் நடைபெற்றது.

முதல் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியும் திருகோணமலை மாவட்ட அணியும் மோதின. அதில் திருகோணமலை அணி வெற்றி பெற்றது.

நடப்பு வருட சம்பியனான அம்பாறை மாவட்ட அணி "பை" மூலம் நேரடியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தது.

இறுதிப் போட்டியில் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்ட அணிகள் மோதியதில் அம்பாறை மாவட்ட அணி 1-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றிவாகை சூடியது.

அம்பாறை மாவட்ட அணியை காரைதீவு பிரதேச செயலக பிரிவு லவன் தலைமையிலான கொக்கி லயன்ஸ் அணியினர் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ-08)

# அனைத்து மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும்

## திருமலையில் பிரதமர் ஹரிணி உத்தரவாதம்

திருகோணமலை, ஜூலை 15

**புதிய கல்வி சீர்திருத்தத்தின் மூலம் பாடசாலை முடித்து வெளியேறும் அனைத்து மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு அல்லது பட்டப்படிப்பை தொடர வாய்ப்புகள் வழங்கப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

அபிவிருத்திக்காக கஷ்ட பிரதேச பாடசாலைகளைத் தெரிவு செய்வது நெருக்கடி நிலையின்றி மாவட்ட அபிவிருத்தி குழுவின் ஒப்புதலுடன் நடக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

திருகோணமலையில் உள்ள மாகாண கல்வித் திணைக்களத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பான விழிப்புணர்வு கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

"இது எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கும் வரலாற்று வாய்ப்பாகும். சர்வதேசத்துடன் பொருந்தக்கூடிய தரமான கல்வியை வழங்குவதற்கு இந்த சீர்திருத்தம் உதவும்.

பாடசாலை கல்வியை முடித்து விட்டு வெளியேறும் போதே வேலைவாய்ப்புக்குத் தகுதியானவர்களாகவும் அல்லது உயர் கல்விக்குச் செல்லத் தகுதியானவர்களாகவும் மாணவர்களை உருவாக்குவதே நோக்கமாகும்.

மாணவர்களுக்கு தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் வழங்கி வேலைவாய்ப்புக்குத் தயாராக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. திறன்கள் முன்பு பல்கலைக்கழகங்களில் கற்றுக்கொடுக்கப்பட்டன, ஆனால் அவை பாடசாலை மட்டத்திலேயே வழங்கப்படும்.

9 ஆம் வகுப்பு முதல் மாணவர்கள் தங்கள் எதிர்கால தொழிலைத் தெரிவு செய்யும் அனுபவத்தைப் பெறும் வகையில் புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. 11 அல்லது 13 ஆண்டுகள் கல்வி முடித்த பிறகு வேலைவாய்ப்பைத் தேர்ந்தெடுக்கவும், பட்டப்படிப்பை தொடரவும் அல்லது இரண்டையும் ஒரே நேரத்தில் செய்வதற்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

சீர்திருத்தத்தின் போது பாடத்திட்டம் மட்டுமல்லாமல், பாடசாலை அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது, ஆசிரியர்களை பயிற்றுவிப்பது, மக்களிடையே ஆராய்ச்சி மற்றும் கலந்துரையாடலை ஏற்படுத்துவதும் செய்யப்படும்.

அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை முறையாக பயன்படுத்த வேண்டும்.

கஷ்ட பிரதேச பாடசாலைகளைத் தெரிவு செய்யும்போது கிராமத்தின் நெருக்கடி அல்லது நண்பர்கள் காரணமாக தெரிவு செய்யக் கூடாது. உறுதியான நடைமுறைப்படி, மாவட்ட அபிவிருத்தி குழுவின் ஒப்புதலுடன் தெரிவு செய்ய வேண்டும்.

கல்வி அமைச்சு, மாகாண சபைகள், மாகாண கல்வித் திணைக்களம், வலயம் மற்றும் பிரதேச கல்வி அலுவலகங்கள் ஒருங்கிணைந்து புதிய திட்டத்துக்கு ஆதரவளிக்க வேண்டும்"- என்றும் பிரதமர் வலியுறுத்தினார். (எ)

# சட்டவிரோத சிகரெட்களுடன் நிந்தவூரில் இருவர் சிக்கினர்

நிந்தவூர், ஜூலை 15

சட்டவிரோத சிகரெட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்களை நிந்தவூர் பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் சட்டவிரோதமாக சிகரெட்கள் விற்பனை செய்யப்படுவதாக நேற்று முன்தினம் நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். நிசாந்த வெதகேக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 07 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 4601 சிகரெட்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைதாகினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளதுடன் சட்டவிரோத சிகரெட்களுடன் கைதான இரண்டு சந்தேக நபர்களையும் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)

# கல்முனை வித்தியாலயத்துக்கு ஸ்மார்ட் போர்ட் வழங்கப்பட்டது

கல்முனை, ஜூலை 15

அம்பாறை மாவட்டம் கல் முனை அல்-அஸ்ஹர் வித்தியா லயத்தில் கல்வி மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு "ஸ்மார்ட் போர்ட்" கையளிக்கும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.




இந்த நிகழ்வில் ரஹ்மத் பௌண்டேசனின் ஸ்தாபகத் தலைவர் ரஹ்மத் மன்சூர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (எ)

# கடற்கரை பிரதேசங்கள் துப்புரவு, அழகுபடுத்தல்



அக்கரைப்பற்று, ஜூலை 15

அரசாங்கத்தின் கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்கரை பிரதேசங்கள் துப்புரவு செய்யப்பட்டு, அழகுபடுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகரவின் ஆலோசனையின் பேரில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் ஏ. எம். பைசாலின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளர் எம். நௌபீஸ் தலைமையில் இந்த வேலைத் திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுமார் 2. 5 கிலோ மீற்றர் அளவிலான கடற்கரைப் பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக கடற்கரைப் பிரதேசங்களை பேணிப் பாதுகாப்பது தொடர்பிலான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் எம். அதாவுல்லா தலைமையில் நடைபெற்றது.

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இருவரிடம் தொடர்ந்து விசாரணை

சம்மாந்துறை, ஜூலை 15

ஐஸ் போதைப்பொருளை சூட்சுமமாக மறைத்து வைத்திருந்த இரு சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லரிச்சல் 01 பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் நடமாடுவதாக நேற்று முன்தினம் சம்மாந்துறை பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அப்பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இரு நபர்கள் சோதனை செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்த கையடக்க தொலைபேசியின் உட்பகுதியில் ஐஸ் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.



இச்சோதனை நடவடிக்கையில் கைதான சந்தேக நபர்கள் 28 மற்றும் 19 வயதுடையவர்கள் ஆவர்.


கைது செய்யப்பட்ட நபர் ஒருவரிடம் 2 கிராம் 631 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் உட்பட கையடக்க தொலைபேசி, பணம் என்பன மீட்கப்பட்டதுடன் மற்றைய சந்தேக நபரிடமிருந்து 330 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

மேலும் குறித்த சோதனை நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் வழிகாட்டுதலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம். நௌபர் தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது. சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரக்கு ரயில் விபத்து:

## பெற்றோல், டீசல் நிரப்பிய 18 கொள்கலன்கள் தீக்கிரை



சென்னை, ஜூலை 15

இந்தியாவின் தமிழகம் சென்னையிலிருந்து பெற்றோல், டீசல் ஏற்றிச் சென்ற சரக்கு ரயில், திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே நேற்று முன்தினம் அதிகாலை தடம் புரண்டு பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில், 18 கொள் கலன்கள் எரிந்து நாசமாகின. இந்த விபத்தால், விரைவு ரயில், புறநகர் மின்சார ரயில் சேவை கடுமையாக பாதிக்கப்பட்டது. (எ)

# இஸ்ரேல் திடீர் தாக்குதல் காஸாவில் 19 பேர் பலி!

### தண்ணீர் எடுக்க வந்தவர்கள் உயிரிழந்த சோகம்

காஸா, ஜூலை 15

**காஸாவில் தண்ணீர் எடுக்க வந்தவர்கள் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய திடீர் தாக்குதலில் 6 சிறுவர்கள் உட்பட19 பேர் உயிரிழந்தனர்.**

இஸ்ரேல் மீது கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்றோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் கொடூரத் தாக்குதல் நடத்தினர். இதில், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கணக்கானோர் பணயக் கைதிகளாக சிறை பிடித்து செல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவர்களை மீட்பதற்காக, காஸாவுக்கு எதிராக இஸ்ரேல் போரில் இறங்கியது. இந்த நிலையில், 21 மாதங்களாக நீடித்து வரும் போரில், காஸா பகுதியில் 58 ஆயிரம் பலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர். ஒர் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காஸா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்தனர்.

இந்தச் சூழலில், நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் 19 பேர் பலியாகினர்.

இவர்களில் பலர் தண்ணீர் பிடிக்க சென்றவர்கள் என்ற சோக தகவல் வெளியாகியுள்ளது. 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு நடந்து சென்று தண்ணீர் பிடித்து வருகின்றனர். இந்த நிலையில், தண்ணீர் பிடிப்பதற்காக குறிப்பிட்ட பகுதியில் 30இற்கும் மேற்பட்டோர் வரிசையில் காத்திருந்தனர். அவர்களில் 20 பேர் சிறுவர்கள்.

இந்த நிலையில், இஸ்ரேல் தரப்பிலிருந்து திடீரென தாக்குதல் நடந்ததும் அவர்கள் நாலாபுறமும் அலறியடித்து ஓடினர்.

எனினும், பலர் தாக்கு தலில் பாதிக்கப்பட்டு, அப்ப டியே தரையில் சாய்ந்தனர். இதில், பலியானவர்களில் 6 பேர் சிறுவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. அமெரிக்க ஆதரவுடனான போர் நிறுத்தம் பற்றி விவாதித்து வரும் சூழலில், இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. (எ)

இந்தியாவுக்கு எதிராக

## அணு ஆயுதத்தை பயன்படுத்த பாகிஸ்தான் நினைக்கவில்லை

இஸ்லாமாபாத், ஜூலை 15

இந்தியாவுடனான அண்மைய மோதலின்போது அணு ஆயுதத்தை பயன்படுத்தும் திட்டம் அறவே இருக்கவில்லை என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்தார்.

பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலை அடுத்து இந்தியா 'ஒப்ரேஷன் சிந்தூர்' இராணுவ நடவடிக்கை மூலம் பாகிஸ்தானில் இருந்த தீவிரவாத முகாம்களை தாக்கி அழித்தது. தொடர்ந்து பாகிஸ்தான் தரப்பிலிருந்து எல்லையோர இந்திய மாநிலங்கள் குறிவைக்கப்பட்டன. இந்தத் தாக்குதலை இந்திய இராணுவம் இடைமறித்து அழித்தது.

இந்த மோதல் குறித்து பாகிஸ்தான் பிரதமர் கடந்த சனிக்கிழமை மாணவர்களுடன் இஸ்லாமாபாத் நகரில் உரையாடினார்.

அப்போது,"நமது அணு சக்தி திட்டம் முற்றிலும் தேசத்தின் தற்காப்பு ரீதியான நடவடிக்கையை சார்ந்தது. இதன் நோக்கம் அமைதியை நோக்கியது. தாக்குதல் நடத்த அல்ல. இந்தியா வுடனான மோதலில் 55 பேர் உயிரிழந்த னர். இந்தியாவின் தாக்குத லுக்கு நாம் பதிலடி கொடுத் தோம்"- என ஷெபாஸ் ஷெரீப் கூறினார். (எ)

## நோபல் பரிசு வென்றவருக்கு கொலை மிரட்டல்



தெஹ்ரான், ஜூலை 15

ஈரானில் நோபல் பரிசு வென்றவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

ஈரானைச் சேர்ந்த பெண்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர் நர்கெஸ் முகமதி.

இவர் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை எதிர்த்து தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். இதற் காக பலமுறை அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இதனையடுத்து கடந்த 2023ஆம் ஆண்டு அமைதிக் கான நோபல் பரிசு அவருக்கு கிடைத்தது.

இந்நிலையில் பெண்களுக்கு ஆதரவான கருத்துகளைத் தெரிவித்து வருவதால் தனக்கு கொலை மிரட்டல் வருவதாக அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (எ)

## இங்கிலாந்தில் விமானம் தரையில் விழுந்து விபத்து

லண்டன், ஜூலை 15

இங்கிலாந்தில் சிறிய ரக விமானம் தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது.

லண்டன் சவுத் எண்ட் விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் சிறிய ரக விமானம் நெதர்லாந்து புறப்பட்டுச் சென்றது.

இந்த நிலையில், விமானம் புறப்பட்ட சில விநாடிகளில் தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதனால், விமானம் தீப்பற்றி எரிந்தது.

இந்த விபத்து குறித்து அறிந்த பொலிஸார், தீயணைப்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். இதில் உயிரிழப்பு ஏற்பட்டதா? என்ற விவரம் இதுவரை வெளியாகவில்லை.

## காலிஸ்தான் அமைப்பினரை கைது செய்தது அமெரிக்கா

வாஷிங்டன், ஜூலை 15

இந்தியாவால் தேடப்படும் முக்கிய நபர் உட்பட காலிஸ் தான் அமைப்பைச் சேர்ந்த 8 நபர்களை அமெரிக்க புலனாய்வுத்துறை கைது செய்தது.

இந்தியாவில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட காலிஸ்தான் அமைப்பினர், ரௌடிகள் பலர் அமெரிக்கா மற்றும் கனடாவுக்குள் சட்டவிரோதமாக செல்லும் சம்பவங்கள் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. இவர்கள் அங்கும் ஆயுதங்களை காட்டி மிரட்டுதல், ஆள்கடத்தல், சித்திரவதை போன்ற குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் முக்கியமான நபர் பவித்தர் சிங் பதாலா. இவர் பாபர் கல்சா என்ற தடை செய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்தவர்.

பல தீவிரவாத வழக்குகளில் தொடர்புடைய இவரை இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு தேடி வந்தது.

இந்த நிலையில் பவித்தர் சிங் பதாலா உட்பட 8 பேரை அமெரிக்க புலனாய்வு அமைப்பான எவ். பி. ஐ. கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தது. (எ)

திபெத்தில்சீனபாடசாலைகளில்

## 10 இலட்சம் குழந்தைகள் கட்டாயமாக சேர்ப்பு

திபெத், ஜூலை 15

திபெத்தில் சீனா நடத்தும் பாடசாலைகளில் 10 இலட்சம் குழந்தைகள் கட்டாயமாக சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

திபெத் ஆக் ஷன் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திபெத்தில் சீனா நடத்தும் பாடசாலைகளில் 10 இலட்சம் குழந்தைகள் கட்டாயப்படுத்தி சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் 4 முதல் 6 வயதுக்குட்பட்ட சுமார் ஒர் இலட்சம் குழந்தைகளும் அடங்குவர். இந்தக் குழந்தைகளை பெற்றோரிடமிருந்து வலுக்கட்டாயமாக பிரித்து அழைத்து வந்துள்ளனர். மீதம் உள்ள 9 இலட்சம் பேர் 6 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

இந்த பாடசாலைகளில் கற்பித்தல் செயல்முறை மிகச்சிறிய வயதிலிருந்தே தொடங்குகிறது. குழந்தைகள் தங்கள் தாய்மொழியில் பேசுவதை தடுத்து சீன மொழியில் பேச கட்டாயப்ப டுத்தப்படுகின்றனர். சீன மொழியில்தான் கற்பிக்கப்படுகிறது- இவ்வாறு அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ)

## “உக்ரைனுக்கு புதிய வான் பாதுகாப்பு அமைப்புகளை அமெரிக்கா அனுப்பும்”

வாஷிங்டன், ஜூலை 15

உக்ரைனுக்கு புதிய வான் பாதுகாப்பு அமைப்புகளை அமெரிக்கா அனுப்பவுள்ளது.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது.

இந்த சண்டையை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உட்பட பல வேறு நாடுகளும் முயற்சித்து வருகின்றன. ஆனால், இதில் இன்னும் உடன்பாடு எட்டப் படாததால், உக்ரைன் மீது ரஷ்யா தனது மழை பொழிந்து வருகிறது. பதிலுக்கு உக்ரைனும் தாக்குதல் நடத்தி வருகிறது.



ரஷ்யா- உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சித்து வரும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை கடுமை யாக விமர்சித்து வருகிறார். வாஷிங்டனில் செய்தியாளர்க ளிடம் பேசிய ட்ரம்ப் கூறிய தாவது: “புடின் அழகாக பேசு கிறார் . ஆனால், அனைவர் மீதும் குண்டுகளை போடு கிறார்.

உக்ரைனுக்கு புதிய வான் பாதுகாப்பு அமைப்புகளை அமெரிக்கா அனுப்பும் உள்ளது”- என்றார்.

எனினும், எத்தனை ஆயுதங்கள் வழங்கப்படும் என்பது பற்றி அவர் எதுவும் கூறவில்லை. (எ)

## நாசாவிலிருந்து 2000 ஊழியர்களை பணிநீக்கம் செய்ய ட்ரம்ப் முடிவு

வாஷிங்டன், ஜூலை 15

நாசாவிலிருந்து 2 ஆயிரம் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்.

2145 பேரை பணிநீக்கம் செய்யப் பட்டியலிடப் பட்டுள்ளதாகவும் இந்த முடிவு ஊழியர்கள் மத்தியில் ஒரு பக்கம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், இன்னொரு பக்கம் அமெரிக்காவின் எதிர்கால ஆராய்ச்சி கடுமையாக பாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அபார வெற்றி

## 94 ஓட்டங்களுக்குள் சுருண்டது இலங்கை



தம்புள்ளை, ஜூலை 15

இலங்கைக்கு எதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில் 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி அபார வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ரி - 20 தொடரில் முதலாவது ஆட்டத்தில் இலங்கை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

இந்த நிலையில், 2ஆவது ரி - 20 போட்டி தம்புள்ளையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 177 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக லிட்டன் தாஸ் 76 ஓட்டங்கள் சேர்த்தார்.

தொடர்ந்து 178 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணியினர், பங்களாதேஷ் வீரர்களின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர். இதன் காரணமாக இலங்கை அணி 15. 2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 94 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி அபார வெற்றி பெற்றது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக பதும் நிஸ்ஸங்கா 32 ஓட்டங்கள் எடுத்தார். பங்களாதேஷ் தரப்பில் ரிஷாத் ஹொசைன் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ரி - 20 போட்டி நாளை 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(எ)

# உலக கிண்ண சம்பியன் பட்டத்தை முதன்முறையாக வென்றது செல்சீ



வாஷிங்டன், ஜூலை 15

பிபா கிளப் உலகக் கிண்ண சம்பியன் பட்டத்தை முதல்முறையாக வென்றது செல்சி அணி.

21ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வந்தது. 32 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரின் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது.

இதில், பாரிஸ் செயிண்ட் - செல்சி அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் பாரிஸ் செயிண்ட் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி செல்சி அணி பிபா கிளப் உலகக் கிண்ண சம்பியன் பட்டத்தை வென்றது. வெற்றி பெற்ற அணிக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கிண்ணம் வழங்கி கௌரவித்தார். (எ)

# விம்பிள்டன் ரென்னிஸ் சம்பியனானார் சினெர்

லண்டன், ஜூலை 15

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில்

முதன்முதலாக ஜன்னிக் சினெர் சம்பியன் பட்டம் வென்றார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் மிகவும் கௌரவமிக்கதான விம்பிள்டன் ரென்னிஸ் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் ஸ்பெயினின் முன்னணி வீரரான கார்லஸ் அல்காரஸ், இத்தாலியின் ஜன்னிக் சினெர் ஆகியோர் மோதினர். 3 மணிநேரம் 4 நிமிடங்கள் பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 4-6,6-4,6-4,6-4 என்ற நேர் செற்களில் கார்லஸ் அல்காரஸை வீழ்த்தி சினெர் அபார வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் முதன்முதலாக சினெர் விம்பிள்டன் சம்பியன் பட்டம் வென்றார். (எ)

# இரண்டாவது இன்னிங்ஸில் இரு அணியும் தடுமாற்றம்

லண்டன், ஜூலை 15


மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் இரு அணியும் தடுமாறி வருகிறது. இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையேயான 3ஆவது டெஸ்ட் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் கடந்த 10ஆம் திகதி தொடங்கியது. இதில் முதல் இன்னிங்ஸில் இரு அணிகளும் தலா 387 ஓட்டங்கள் எடுத்தன.2ஆவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அனைத்து விக்கெட்களையும் இழந்து 192 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து 193 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது.

ஜெய்ஸ்வால் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். 4ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இந்தியா 4 விக்கெட்கள் இழப்புக்கு 58 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்தியா வெற்றிபெற இன்னும் 135 ஓட்டங்கள் தேவைப்படுகிறது. இங்கிலாந்து வெற்றிபெற இன்னும் 6 விக்கெட்களை வீழ்த்த வேண்டும். (எ)

# டோனியின் சாதனையை முறியடித்த ரிஷப் பண்ட்



லண்டன், ஜூலை 15

எம். எஸ். டோனியின் நீண்டகால சாதனையை ரிஷப் பண்ட் முறியடித்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 3ஆவது டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸில் நடைபெற்று வருகிறது. இதில், இந்திய அணியின் துணைத் தலைவர் ரிஷப் பண்ட், புதிய சாதனையை படைத்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் அதிக சிக்ஸர்கள் (35 சிக்ஸர்கள்) விளாசிய பெருமையை பெற்றுள்ளார். இதனால் அவர் மேற்கு இந்திய தீவுகளின் முன்னாள் வீரரான விவியன் ரிச்சர்ட்சை (34 சிக்ஸர்கள்) பின்னுக்குத் தள்ளி சாதனை படைத்துள்ளார்.

இதேபோன்று டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்காக 88 சிக்ஸர்கள் அடித்து ரோஹித் சர்மாவுக்கு இணையாகவுள்ளார். அதுவும் 46 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இந்த சாதனையை படைத்துள்ளார். ரோஹித் 67 போட்டிகள் விளையாடியுள்ளார். இந்த வரிசையில் சேவாக் (90 சிக்ஸர்கள்) முதல் இடத்தில் உள்ளார்.

3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இங்கிலாந்து மண்ணில் அதிக ஓட்டங்கள் (416 ஓட்டங்கள்) எடுத்த இந்திய விக்கெட் காப்பாளராகவும் ரிஷப் பண்ட் உள்ளார். இதனால், எம். எஸ். டோனியின் (349 ஓட்டங்கள்) நீண்ட கால சாதனையை ரிஷப் பண்ட் முறியடித்துள்ளார்.

2014ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கு எதிரான சுற்றுப் பயணத்தின்போது, எம். எஸ். டோனி இந்த சாதனையை படைத்தார். ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இந்தச் சாதனையை டோனி தன்வசம் வைத்திருந்த நிலையில், 10 ஆண்டுகளுக்கு பின்பு டோனியின் சாதனையை பண்ட் முறியடித்துள்ளார். (எ)

# மேஜர் லீக் கிரிக்கெட் நியூயோர்க் சம்பியன்




வாஷிங்டன், ஜூலை 15

மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் எம். ஐ. நியூயோர்க் அணி சம்பியனானது.

மேஜர் லீக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் வாஷிங்டன் பிரீடம் - எம். ஐ. நியூயோர்க் அணிகள் மோதின.

இதில், எம். ஐ. நியூயோர்க் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 180 ஓட்டங்கள் எடுத்தது. எம். ஐ. நியூயோர்க் தரப்பில் அதிகபட்சமாக டி கொக் 77 ஓட்டங்கள் எடுத்தார். தொடர்ந்து 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய வாஷிங்டன் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 175 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்ற எம்.ஐ. நியூயோர்க் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. வாஷிங்டன் தரப்பில் அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா 70 ஓட்டங்கள் எடுத்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## பெரும் மக்கள்...

அமெரிக்காவால் ஆடைகளுக்கான வரியை 46.5 வீதமாக உயர்ந்துள்ளது. இதனால் ஆடை தொழில்கள் சிக்கலுக்கு உள்ளாகின்றன. சஜித் பிரேமதாச இந்த பிரச்சினையை தொடர்ந்து வெளிநாட்டுத் தூதர்களிடம் முன்வைத்துள்ளார். ஆனால் அரசாங்கம் எந்த தீர்வும் வழங்கவில்லை.

அரசாங்கம் 18 வீத டிஜிற்றல் வரி விதித்துள்ளது. இது நாட்டின் இளைஞர்களுக்கும், தொடர்பாடல் துறைக்கும் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இவர்கள் மீது ஆதரவுடன் பதவிக்கு வந்த அரசு இப்போது இவர்களையே வரி மூலம் தாக்குகிறது.

மக்கள் குறைந்த வருமானத்தில் வாழ முயற்சி செய்யும் நிலையில், அரசின் வரிவிதிப்புகள் அவர்களைக் கடுமையாக பாதிக்கின்றன. இது எதிர்காலத்தில் பெரும் மக்கள் போராட்டம் உருவாக்கும் அபாயத்தில் உள்ளது- என்றார். (அ)

## கனடிய...

தனது பணியை நிறைவு செய்து திரும்பவுள்ளார் என்று கனடியத் தூதுவர் தெரிவித்தார்.

இதுவரை, கனடியத் தூதுவர் வழங்கிய ஒத்துழைப்புகள் மற்றும் கனேடிய அரசாங்கம் மேற்கொண்ட உதவிகளுக்கு ஆளுநர் நன்றி தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில், வன்னிப் பிராந்தியத்தில் காணி தொடர்பான பிணக்குகள் அதிகளவில் உள்ளமையை சுட்டிக்காட்டிய ஆளுநர், போர் காரணமாக ஆவணங்கள் அழிவடைந்தமை, இதற்கு பிரதான காரணம் என தெரிவித்தார்.

வன வளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன, கடந்த காலங்களில், இங்குள்ள அதிகாரிகளுக்கு தெரியாமல் கூகுள் வரைபடத்தின் உதவியுடன், காணிகளை வர்த்தமானியில் பிரசுரித்தமையால் எழுந்துள்ள சவால்களை ஆளுநர் எடுத்துரைத்தார்.

இதற்கு, தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து, ஆளுநர், கனடியத் தூதுவருக்கு விவரித்தார்.

இந்தத் திணைக்களங்களால், வடக்கு மாகாணம் மாத்திரமல்லாமல், ஏனைய பிரதேசங்களிலும் பாதிப்புக்கள் உள்ளதாக அறிந்திருப்பதாக, கனேடியத் தூதுவர் பதிலளித்தார்.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் உள்ளமையால், மக்கள் இன்னமும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என சுட்டிக்காட்டிய ஆளுநர், மக்கள் அதனை முழுமைப்படுத்துவதற்கு உதவி தேவை எனக் கோரிக்கை விடுத்தார்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுகின்றன எனவும், அவர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில், வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதற்கு உதவிகள் தேவை எனவும், ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்தில், விவசாய மற்றும் கடல் உற்பத்திப் பொருட்களை, பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு, கனடிய மக்களை ஊக்குவிக்க வேண்டும் என, ஆளுநர் கோரிக்கை முன்வைத்தார்.

வடக்கில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள முதலீட்டு வலயங்களின் முன்னேற்றம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விரிவாக்கம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில், கனேடியத் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

இந்த சந்திப்பில், ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (அ)

## பயங்கரவாதம்...

குறித்தவொரு செயற்பாடு பயங்கரவாதம் என்பதற்கான வரைவிலக்கணத்தினுள் உள்ளடக்கப்படவேண்டுமாயின், அது மிகப்பயங்கரமானதொரு நடவடிக்கையுடன் தொடர்புடையதாகவோ அல்லது மிதமிஞ்சிய அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியதாகவோ அல்லது தமது இலக்குகளை அடைந்துகொள்வதற்காக மேற்குறிப்பிட்ட இரண்டு கூறுகளையும் உபயோகிக்கக்கூடிய தனிநபரினதோ, அமைப்பினதோ நோக்கத்தை அடைவதை முன்னிறுத்தி அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையாகவோ இருக்கவேண்டும்.

அதேபோன்று "பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சில செயற்பாடுகள் வன்முறையற்றதாக அமையக்கூடும். தீவிரவாத அமைப்பின் உறுப்பினர் ஒருவர் அவ்வமைப்பின் இலக்கை அடைந்துகொள்ளும் நோக்கில் இலத்திரனியல் உபகரணங்கள், கணினி கட்டமைப்புக்கள் போன்றவற்றை யாரும் அறியாத வண்ணம் மறைத்து வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடமுடியும். இருப்பினும் சிலரது செயற்பாடுகளில் வன்முறையின் கூறுகள் தென்படினும், அவற்றைப் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டங்களின் ஊடாகக் கையாளக்கூடாது.

அதுமாத்திரமன்றி, "காலிமுகத்திடல் அரகலய போராட்டத்தின்போது பதிவான சில நடவடிக்கைகளை சிலர் பயங்கரவாத செயற்பாடு எனக் கூறலாம். ஆனால், அங்கு பதிவான சில நடவடிக்கைகள் முற்றுமுழுதாக அமைதியான முறையில் இடம்பெற்றவை அல்ல எனினும், அவற்றைப் பயங்கரவாத செயற்பாடாக வகைப்படுத்தமுடியாது.

போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களை அடுத்து தீவிரமடைந்த வன்முறைகள், அவற்றின் விளைவாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டமை மற்றும் அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமை என்பன பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழன்றி, பொதுச்சட்டத்தின் கீழேயே கையாளப்படவேண்டும் - என்றார். (அ)

## நடிகை சரோஜா...

உடல்நலக் குறைவு காரணமாக நேற்று காலை 9 மணியளவில் அவரது உயிர் பிரிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்னடத்து பைங்கிளி, அபிநய சரஸ்வதி என்ற அடைமொழியுடன் திரையுலகில் கொடிகட்டிப் பறந்த சரோஜா தேவி, தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளிலும் தனது முத்திரையைப் பதித்தார்.

அவரது நீண்ட திரையுலகப் பயணத்தில், சுமார் 160 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார்.

தமிழ் சினிமாவில், மக்கள் திலகம் எம்.ஜி.ஆருடன் 26 படங்களிலும், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உடன் 22 படங்களிலும் நடித்துள்ளார். தமிழ் சினிமா ஜாம்பவான்களுடன் இணைந்து மறக்க முடியாத பல வெற்றிப் படங்களை அளித்த சரோஜா தேவி "அன்னை இல்லம்," "நாடோடி மன்னன்," "பாகப்பிரிவினை," "திருவிளையாடல்" போன்ற படங்களில் அவரது பங்களிப்பு இன்றும் பேசப்படுகிறது.

இவரது இயல்பான நடிப்பு, வசீகரமான புன்னகை மற்றும் கதாநாயகர்களுடன் இணக்கமான ஜோடி பொருத்தம் ஆகியவை அவரை ஒரு தலைமுறை ரசிகர்களின் கனவு நாயகியாக மாற்றின.

கன்னடம், தமிழ், தெலுங்கு, இந்தி எனப் பல மொழித் திரைப்படங்களில் முன்னணி நாயகியாக வலம் வந்த பி. சரோஜா தேவி, இந்திய சினிமாவின் வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்திய அரசு இவருக்கு பத்மசிறீ மற்றும் பத்ம பூஷண் விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது. பல மாநில அரசுகளின் விருதுகளையும், வாழ்நாள் சாதனையாளர் விருதுகளையும் பெற்றுள்ளார்.

திரைப்படங்களில் இருந்து விலகிய பின்னரும், பொதுநிகழ்வுகளில் பங்கேற்று வந்த சரோஜா தேவி, திரைத்துறைக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

அவரது மறைவு, ஒரு தலைசிறந்த நடிகையை மட்டுமல்ல, இந்தியத் திரையுலகின் ஒரு பொற்காலத்தின் நினைவுகளையும் சுமந்து செல்கிறது.

அவரது மறைவுக்குத் திரையுலக பிரபலங்களும், அரசியல் தலைவர்களும், ரசிகர்களும் சமூக வலைத்தளங்கள் மற்றும் நேரடி இரங்கல் செய்திகள் மூலம் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (அ)

## ரவி, ஷானியை...

அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார மீட்சிக்குரிய புதிய திட்டங்கள் ஏதும் இல்லாத நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுவதை மாத்திரம் பிரதான பொருளாதாரக் கொள்கையாக அரசாங்கம் கொண்டுள்ளது. பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் அரசாங்கம் உண்மையை மூடிமறைக்கவே முயற்சிக்கிறது. அத்துடன், அரச அதிகாரிகளை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்கும் முயற்சிக்கிறது. இந்த கொள்கலன்களில் வெடிபொருட்கள் அல்லது ஆயுதங்கள் இருந்ததாக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு இதுவரையில் பதில் கிடைக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் பற்றி தற்போது புதிய விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. இந்து மதத்தை சார்ந்த பிள்ளையான் சிறையில் இருந்தவாறு முஸ்லிம் இளைஞர்களை தூண்டிவிட்டு பௌத்த - சிங்கள தலைவரை ஆட்சிக்கு கொண்டுவர குண்டுத் தாக்குதலை நடத்த திட்டமிட்டதாக குறிப்பிடப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த இப்ராஹிமின் இரண்டு புதல்வர்களும் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்தினார்கள் என்பதை அரசாங்கம் மறந்துவிட்டது.

கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வரவே குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுய சிந்தனையில் இவ்வாறு பேசுகிறாரா அல்லது குறுகிய அரசியல் நோக்கத்துக்காக இவ்வாறு உளறுகிறாரா என்பதை அறிய முடியவில்லை.

2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் அதிகார சபை தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றிபெற்றது. 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கு வெற்றி உறுதி என்று மக்கள் தமது ஆணை ஊடாக உறுதிப்படுத்தியிருந்தார்கள். இவ்வாறான நிலையில் தேர்தல் வெற்றிக்காக குண்டுத் தாக்குதலை நடத்த வேண்டிய அவசியம் ராஜபக்ஷர்களுக்கு இருக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்ட ரவி செனவிரத்ன மற்றும் சானி அபேசேகர ஆகியோர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை பணிமனையில் இருந்து ஊடக சந்திப்புகளை நடத்தினர். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு அர்ப்பணிப்புடன் செயல்பட்டார்கள்.

ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியதாகவும், அவரது கோரிக்கைக்கு அமைவாகவே இவ்விருவரும் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதன் உண்மைத்தன்மையை பேராயர் வெளிப்படுத்த வேண்டும். யாரை அரச சேவையில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதை கத்தோலிக்க சபை எவ்வாறு தீர்மானிக்க முடியும். இந்த அரசாங்கத்தின் போலியான வாக்குறுதிகளுக்கு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஏமாற்றமடையக் கூடாது என்று அவரிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (அ)

## இலஞ்ச குற்றச்சாட்டில் கைதானோருக்கு பிணை

கொழும்பு, ஜுலை 15

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் முன்னாள் பிரதி ஆணையாளர், திணைக்களத்தின் இரண்டு உதவி முகாமையாளர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க அவர்கள் மூவரையும் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

## அநுர அரசு...

பதிலளிக்கும்போது சதுர சேனாரத்ன இந்த கருத்துக்களை கூறினார்.

அவரது தந்தையும் முன்னாள் அமைச்சருமான ராஜித சேனாரத்ன நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்பிணை மனுவை தாக்கல் செய்த பின்னணியில் அவரது கருத்துகள் வந்துள்ளன.

அரசுக்கு 26.2 மில்லியன் ரூபாய் இழப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் மணல் அகழ்வு ஒப்பந்தம் தொடர்பாக இலஞ்ச ஒழிப்பு ஆணையகத்தால் கைது செய்யப்படுவதைத் தடுக்கக் கோரி ராஜித சேனாரத்ன முன் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 'புலிகளின் குரல்'...

ஆசிரியராகவும் செய்தி வாசிப்பாளராகவும் 2003ஆம் ஆண்டு வரையில் செயல்பட்டிருந்தார். அவருடைய செய்தி வாசிப்புப் பாணியை வைத்து செய்தியின் கனதி தொடர்பில் மக்கள் உணரக்கூடிய அளவிற்கு அவருடைய அறிவிப்பு தனித்துவம் பெற்றிருந்தது.

நிதர்சனம் நிறுவனத்தில் மாதாந்தம் வெளியாகிய ஒளிவீச்சு காணொளிச் சஞ்சிகையில் தொடர்ந்து மாதாந்தம் இடம்பெற்ற "சமகாலப் பார்வை" என்ற நிகழ்ச்சிக்கான குரல் வழங்குபவராக நீண்டகாலமாக செயற்பட்டார்.

நிதர்சனம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் நேர்காணலுடன் ஒளிபரப்பாகிய "விடுதலைத் தீப்பொறி" என்கிற நிகழ்ச்சியின் குரல் வழங்குநராக செயற்பட்டார். தலைவர் பிரபாகரனின் 50ஆவது பிறந்தநாளை ஒட்டி நிதர்சனம் நிறுவனம் தயாரித்த "தலைநிமிர்வு 50" என்ற ஆவணப்படம் உட்பட்ட ஏராளமான ஆவண வெளியீடுகளின் பிரதான குரல் தொகுப்பாளராக புகழ்பெற்றிருந்தார்.

இடப்பெயர்வுக்கு முன்னர், நிதர்சனம் நிறுவனத்தினரை யாழ்ப்பாணத்தில் இரண்டு சந்தர்ப்பங்களிலும் பின்னர் முள்ளியவளையில் புலிகளின்குரல் வானொலி செயற்பட்ட 1998 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் தலைவரை சந்தித்து மதிப்பளிப்பளிக்கப்பட்டார்.

புலிகளின்குரல் வானொலியில் ஒலிபரப்பாகிய வரலாற்றுத் தொடரான "காலச்சக்கரம்" என்ற நிகழ்ச்சியை எழுதித் தயாரித்து மறைந்த கலைஞர் சங்கநாதன் அவர்களுடன் இணைந்து குரல் வழங்கியிருந்தார்.

விவசாயம் சார்ந்த கருப்பொருளை உள்ளடக்கிய "மண்முற்றம்" என்ற நிகழ்ச்சியை எழுதித் தயாரித்து அதில் குரல் வழங்கியுமிருந்தார். மக்களின் குரலாக ஒலித்த "ஊர் சுற்றும் ஒலி வாங்கி" என்ற நேர்காணல் நிகழ்ச்சியை புலிகளின்குரல் வானொலியில் தயாரித்திருந்தார். 2003 ஆண்டிலிருந்து ஊடகத்துறையிலிருந்து ஒதுங்கிய அவர் ஆங்கில பகுதி நேர ஆசிரியராகவும் பின்னர் ஆசிரியராகவும் செயல்பட்டு வந்திருந்தார்.

அண்மையில் விபத்து ஒன்றில் சிக்கி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்திருந்தார். இந்நிலையில் மாரடைப்பால் நேற்று காலமானார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் போக்குவரத்து மீண்டும்

## 118 கோடி ரூபாவுக்கு திட்ட மதிப்பீடு தயார்

சென்னை, ஜூலை 15

**இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் ஆகிய இடங்களுக்கு இடையே கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க, தமிழக மாநில அரசின் சிறு துறைமுகங்கள் திணைக்களம் ஊடாக 118 கோடி ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.**

அத்துடன், இராமேஸ்வரம் துறைமுகத்தை சீரமைக்க, 6.24 கோடி ரூபாயில் மத்திய அரசின் ஊடாக பணிகள் நடந்து வருவதாகத் தமிழக செய்திகள் கூறுகின்றன.

இருப்பினும், மத்திய அரசாங்கத்திடம் இருந்து இன்னும் சேவைக்கான அனுமதி கிடைக்கவில்லை.

அதேநேரம், தலைமன்னாரிலும் கப்பல் சேவைக்கான ஆயத்தப் பணிகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் தமிழக அரசு தரப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

முன்னதாக, தமிழகத்தின் தனுஸ்கோடியில் இருந்து, இலங்கை தலைமன்னார் வரை, 1914 முதல் கப்பல் போக்குவரத்து இடம்பெற்று வந்தது.

எனினும், 1964ஆம் ஆண்டு வீசிய கடுமையான புயல் காரணமாக, தனுஸ்கோடி கடலில் மூழ்கியதால், அந்த சேவை நிறுத்தப்பட்டது.

பின்னர், இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையிலான கப்பல் போக்குவரத்து இடம்பெற்று வந்தநிலையில், இலங்கையின் போர் காரணமாக, 1984ஆம் ஆண்டு மத்திய அரசால் அந்த கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

இந்தநிலையில், தற்போது இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டால், ஒரு மணி நேரத்திற்குள் தலைமன்னார் சென்றுவிட முடியும் என்றும் நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ)

## மக்களின் உயிரையும் பாதுகாக்க முடியாத நிலைக்கு வந்துள்ள அரசு!

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 15

தேர்தல் காலப்பிரிவில் நாட்டு மக்களுக்கு வழங்கிய பல வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் மீறியுள்ளது என்பது விசேட கணக்கெடுப்பின் ஊடாக தெரியவந்துள்ளது. நாட்டில் சட்டம் ஒழுங்கை வலுப்படுத்துவோம் என இந்த அரசாங்கம் தெளிவான வாக்குறுதியை வழங்கியிருந்தது.

நாட்டு மக்களினது வாழும் உரிமையைப் பாதுகாப்பது நாட்டின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்று என்று பொதுமக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும், இன்றளவில், முறையான பொது மக்கள் பாதுகாப்பை வழங்க முடியாததொரு அரசாங்கமே காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்தார்.

நாட்டில் காட்டுச் சட்டமே தற்போது நடைமுறையில் காணப்படுகின்றது. நாட்டில் சட்டத்தின் ஆட்சி முற்றிலுமாக அழிக்கப்பட்டு, 67 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஊடாக 37 உயிர்கள் பலியாகியுள்ளன.

தேசிய பாதுகாப்பு குறித்து ரியுசன் வகுப்பு களை எடுப்போம் என ஆளும் தரப்பினர் தேர்தல் மேடைகளில் மக்கள் மத்தியில் வீராப்புடன் பிரஸ்தாபித்தனர். ஆனால் இன்று தேசிய பாதுகாப்பும், பொது மக்கள் பாதுகாப்பும் முற்றிலுமாக இல்லாது போயுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மக்களின் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எந்நேரத்தில், எந்தக் கட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு உயிர்கள் பழிபோகும் என்ற பிரச்சினை எழுந்து காணப்படுகின்றன. சட்டம் ஒழுங்கு மீதான தற்போதைய அடி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்.

ஆனபடியால் இதை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும். இந்தப் பொறுப்பிலிருந்து அரசாங்கம் தப்பித்து விட முடியாது. ஒட்டுமொத்த பொதுமக்களும் இந்த தேசிய பாதுகாப்புப் பிரச்சினைக்கு தீர்வை எதிர்பார்த்து நிற்பதால் அரசாங்கம் இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

இந்த கொலை கலாசாரத்தைக் கட்டுப்படுத்த வலுவான சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவ்வாறு உரிய நடவடிக்கை எடுக்காத விடத்து மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். இது அரசாங் கத்தின் தோல்வியை காட்டி நிற்கிறது என்று எதிர் கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

## குழந்தைகளுக்கு 5000 ரூபா வழங்கும் திட்டம் இன்று முதல்

கொழும்பு, ஜூலை 15



நிறுவன பராமரிப்பு, பாதுகாவலரின் கீழ் உள்ள குழந்தைகள் மற்றும் வீதியோரக் குழந்தைகளுக்கு 5,000 ரூபா உதவித்தொகை வழங்கும் திட்டம் நாளை ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-குறித்த 5,000 ரூபா கொடுப்பனவு நாடு முழுவதும் உள்ள 306 குழந்தை அபிவிருத்தி நிலையங்களில் வசிக்கும் 9,191 குழந்தைகளுக்கு பயனளிக்கும்.

குழந்தைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையில் 3,000 ரூபா குழந்தைகளை பொறுப்பேற்றுள்ள நிறுவனங்களின் பராமரிப்பிற்காக வழங்கப்படும்.

2,000 ரூபா "அர்த" என்ற குழந்தையின் கணக்கில் வரவு வைக்கப்படும். அவர்களுக்கு 18 வயது பூர்த்தியாகும் போது எதிர்கால நடவடிக்கைகளுக்காக இந்த 2,000 ரூபா பணம் அவர்களுக்கு பயனளிக்கும்.

இந்த திட்டத்திற்காக வரவு செலவுத் திட்டத்தில் இருந்து 1,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

## தமிழக மீனவர் குற்றச்சாட்டை மறுக்கும் இலங்கை கடற்படை

கொழும்பு, ஜூலை 15

இலங்கை கடற்படையின் ரோந்து படகு மோதியதில் இராமேஸ்வரம் மீன்பிடி விசைப்படகின் பின்புற பகுதி உடைந்து சேதமடைந்துள்ளதாகத் தமிழக கடற்றொழிலாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட 07 இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறையை அண்மித்த கடற்பரப்பில் கைதான அவர்கள், மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கடற்றொழிலாளர்களுடன் படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக, இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தமது படகை இலங்கை கடற்படையின் படகு மோதிச் சேதமாக்கியதாக இந்திய கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்திய கடற்றொழிலாளர்களின் குற்றச்சாட்டுத் தொடர்பில், இலங்கை கடற்படையினரிடம் வினவியபோது-

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிப்போரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என, இலங்கை கடற்படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன், இந்திய கடற்றொழிலாளர்கள் கூறுவதைப் போல, கடல் எல்லையை மீறி அவர்களுடைய படகுகள் மீது தாக்குதல் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் கூறினார். (அ)

# பத்மே, சலிந்த கைது குறித்து அதிகாரபூர்வ தகவல் இல்லை

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

கொழும்பு, ஜூலை 15

குற்றவியல் கும்பலைச் சேர்ந்த சந்தேக நபர்களான கெஹெல்பத்தர பத்மே மற்றும் கமாண்டோ சலிந்த ஆகியோர் மலேசியாவில் காவலில் இருப்பதாக எந்த இராஜதந்திர அல்லது பாதுகாப்புத் தகவலும் கிடைக்கவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு. வுட்லர் தெரிவித் துள்ளார்.

மலேசியாவில் கைது செய்யப்பட்ட 26 சந்தேக நபர்களை விசாரிக்க பல பொலிஸ் அதிகாரிகள் குழுக்கள் மலேசியா மற்றும் தாய்லாந்துக்குச் சென்றுள்ளதாகவும், இந்த இரண்டு சந்தேக நபர்களின் பெயர்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பல்வேறு குற்றங்களுக்காக மலேசியாவில் கைது செய்யப்பட்ட 26 இலங்கையர்கள் குறித்து இலங்கை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் இடம்பெற்ற சிறப்பு செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சம்பந்தப்பட்ட இலங்கையர்கள் தொடர்பாக விசாரணைகள் தொடங் கப்பட்டுள்ளன, அதன்படி, எதிர்காலத்தில் அவர்களை மலேசியாவிலிருந்து நாடு கடத்துவதா அல்லது மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதா என்பதை மலேசிய அரசாங்கம் முடிவு செய்யும்.

ஜூலை 11 ஆம் திகதி, மலேசியாவில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களை அடையாளம் காண இலங்கை பொலிஸாரின் உதவி கோரப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் துறை யின் தேசிய மத்திய பணியகத்துக்கு தகவல் கிடைத்தது.

அதன்படி, இந்த இரண்டு சந்தேக நபர்களின் புகைப் படங்களும் கைரேகைகளும் குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் குற்றப் பதிவுப் பணியகத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்த ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டது.

இதன்படி 20 வயதுடைய ஒரு சந்தேக நபரின் அடை யாளம் உறுதிப்படுத்தப்பட்டது-என்றார். (அ)

## சொத்து விவரங்கள் சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 15

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்து அறிவிப்புகளை சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளிடமிருந்து அபராதம் அறவிடப்படவுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த அறிவிப்புகளை ஏராளமானோர் சமர்ப்பிக்க உள்ளதாகவும், நாளைய தினத்திற்கு பிறகு அறிவிப்புகளை சமர்ப்பிக்கும் அரச அதிகாரிகளிடமிருந்து அபராதம் அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிவித்துள்ளதுடன், அபராதம் விதிப்பது தொடர்பான இறுதி முடிவு இன்று பிற்பகல் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளின் ஊதியத்திலிருந்து நாளை முதல் தாமதமான நாட்களுக்கான அபராதம் அறவிடப்படும்.

மேலும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்து அறிவிப்புகளை இன்னும் சமர்ப்பிக்காத அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை நிறுவனத் தலைவர்கள் எதிர்வரும் நாட்களில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு அனுப்ப வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.